ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1865/36 - 2014 ජුනි මස 06 වැනි සිකුරාදා - 2014.06.06
*1865/36 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க மற்றும் 2011.03.01 ஆந் திகதிய 1695/15 ஆம் இலக்கஅதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பு**

2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க மற்றும் 2011.03.01 ஆந் திகதிய 1695/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 6.2, 6.3, 7.4.2.4, 8.1, 8.2, 10.3.1 மற்றும் 10.3.2 ஆம் பிரிவுகள் பின்வரும் விதமாக திருத்தப்படுகின்றன.

6.2 அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் :

| | தரம் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | தரம் III<br>தரம் II<br>தரம் I | கணக்காளர் அல்லது நிதி அலுவலர்/உள்ளகக் கணக்காய்வாளர் |
| 2. | I தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் வகிக்க வேண்டுமென இனங்காணப்பட்டுள்ள பதவிகள் | பிரதம கணக்காளர் அல்லது பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| 3. | விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் வகித்தல் வேண்டுமென இனங்காணப்பட்டுள்ள பதவிகள் | பிரதி பிரதம செயலாளர் (நிதி),பிரதம நிதி அலுவலர், பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |

பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஆகிய பதவிப் பெயர்கள் பொதுத் திறைசேரியின் திணைக்களங்களில், தொடர்புடைய பதவிகளின் கடமையின் தன்மை மற்றும் சேவையின் தேவைப்பாடு என்பவற்றைக் கவனத்திலெடுத்து அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற இலங்கைக் கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர்கள் விடயத்தில் பயன்படுத்தப்படுகின்றது எனவும் கவனத்திலெடுத்த பின்னர், அவ்வாறான திணைக்களங்களில், ஒரு கணக்காளரின்/உள்ளகக் கணக்காய்வாளரின் கடமையை மேற்கொள்பவர் சம்பந்தமாகவன்றி, பொதுத் திறைசேரியின் திணைக்களங்களில், இலங்கைக் கணக்காளர் சேவையின் I, II மற்றும் III ஆம் தரங்களுக்காக மேற்சொன்ன பதவிப் பெயர்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதனை நடைமுறைப்படுத்தப்படும்.

6.3 இணைந்த பதவிகளின் எண்ணிக்கை: 1600 (III, II, மற்றும் I ஆம் தரங்கள்)

7.4.2.4. அனுபவம் - சேவை அனுபவம் ஆட்சேர்ப்பின் போது மேலதிக தகைமையாக இருக்கும்.

கட்டுக்கோப்பான நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கல் திட்டத்திற்கு,

தொடர்புடைய துறையில் சேவை அனுபவத்திற்காக ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் - உயர்ந்தபட்சம் 15 புள்ளிகள்.

08. **வினைத்திறன்காண் தடை :**

8.1

| எந்த வினைத்திறன்காண் தடை என்பது பற்றி | வினைத்திறன்காண் தடையிலிருந்து விடுபடுவது எத்தனை ஆண்டுகளின் பின்னர் | வினைத்திறன்காண் தடையின் தன்மை எழுத்து மூலம் /தொழில்சார் சான்றிதழ் பாடநெறி/பிற |
|---|---|---|
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை | இலங்கை கணக்காளர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் | இணைப்பு '7' இனைப் பார்க்க |

8.2 பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும்? வினைத்திறன்காண் தடைப் பரீட்சை வருடத்தில் இரண்டு முறை நடாத்தப்படும்.

10.3.1 பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களை பதவி உயர்த்துவதன் ஊடாக மாத்திரம் விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்வு செய்யப்படுகின்றது.

I. குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
II. பதவி உயர்வு தொடர்பான தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்தன்று நிறைவேற்றுச் சேவை வகையின் தரம் I இல் 05 வருடங்கள் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவையாற்றி இருத்தல் மற்றும் தரம் ஐ இற்கு பதவி உயர்த்தப்பட்ட பின்னர் 05 வருட காலப் பகுதிக்கான சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.
III. பதவி உயர்விற்காக தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்தன்று தகைமை பெறும் சேவையில்/பதவிகளுக்குரிய நிறைவேற்று சேவை வகையில் 18 வருட சேவைக் காலங்களுக்கு குறையாதவாறு தொடர்ச்சியாக சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.
IV. பதவி உயர்விற்காக தகைமை பெறும் தினத்திற்கு முந்திய 05 வருடங்களில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது அதற்கு மேலான மட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
V. பதவி உயர்விற்கான தகைமை பெறும் தினத்திற்கு முந்திய 05 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக் காலமொன்று இருத்தல் மற்றும் ஒழுக்காற்று தண்டனை ஒன்றிற்கு ஆளாகாது இருத்தல்.

10.3.2 பதவி உயர்வு முறைமை

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி சேவை மூப்பு மற்றும் திறமை என்பவற்றினைக் கவனத்திற் கொண்டு நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப பதவி உயர்வு வழங்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம்,

ரீ.எம்.எல்.சீ. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
கொழும்பு 05,
2014, மாச்சு 31.

6- 600

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.